FIRST INFORMATION REPORT

Under Section 173 BNSS

முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8109478

1. District : மாவட்டம் Ranipet PS: காவல்நிலையம் Vigilance&Anti Corruption Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 3/2025 Date: நாள் 20.09.2025

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act 1988 as amended by PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: u/s 7 of pc (Amendment) Act, 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 17.9.2025 @ 15.45 hrs Date to : நாள் வரை 18.09.2025 @ 17.00 hrs and 19.09.2025 @ 20.30 hrs

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.09.2025 Time : நேரம் 07.45 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-III Time : நேரம் 20.09.2025 @ 0745 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக – Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் – Ammoor village at about 9 kms North East direction

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி Ammoor Village, Walaja Taluk, Ranipet District

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. A.K. Karthikeyan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Kannan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1971 (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –

(f) Occupation : தொழில் Ex-Serviceman (g) Address : முகவரி H.No.8, Bharathiyar Street, Ammoor village, Walaja Taluk, Ranipet Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt. Chithra, Surveyor, Walaja Taluk office, Ranipet District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான் இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20/09/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vijayalakshmi
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.09.2025 @ 11.45 hrs

Name: பெயர் S. Vijayalakshmi,
Rank: நிலை Inspector of Police, No. எண்
Vigilance & Anti-Corruption,
Ranipet.

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 20.09.2025 ஆம் தேதி காலை 07.45 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த புகார்தாரர் திரு. A.K. கார்த்திகேயன், த/பெ கண்ணன், H.No.8, பாரதியார் தெரு, அம்மூர் கிராமம், வாலாஜா தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவரின் புகார் மனுவை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு:- இராணிப்பேட்டை, 20.09.2025. அனுப்புநர் A.K. கார்த்திகேயன், த/பெ கண்ணன், H.No.8, பாரதியார் தெரு, அம்மூர் கிராமம், வாலாஜா தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம். பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம். அய்யா, நான் இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா தாலுக்கா, அம்மூர் கிராமம், பாரதியார் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் இந்திய இராணுவத்தில் 32½ ஆண்டுகள் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். தற்சமயம் நான் பாண்டிச்சேரியில் உள்ள ராஸ்ட்ரீய ரக்ஷா யுனிவர்சிட்டியில் டிரில் மாஸ்டராக அப்பாயிண்ட்மென்ட் ஆகியுள்ளேன். வருகின்ற 22.09.2025 அன்று நான் அங்கு வேலைக்கு செல்ல வேண்டும். என்னுடைய மனைவி பெயர் பூங்கொடி எங்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். இருவரும் படித்து முடித்து தற்போது இந்திய இராணுவத்தில் பணி புரிந்து வருகின்றனர். என்னுடைய மாமனார் பெயர் பட்டாபிராமன், அவர் கடந்த 21.08.1998 அன்று இறந்து விட்டார். மாமியார் பெயர் பட்டம்மாள் அவர் கடந்த 02.05.2021 அன்று இறந்து விட்டார். என்னுடைய மாமனார் மற்றும் மாமியாருக்கு மொத்தம் 4 பெண் குழந்தைகள். என்னுடைய மனைவி பூங்கொடி மூத்த மகள் ஆவார். அவருக்கு வாணி, கற்பகம், தரணி என மூன்று தங்கைகள் உள்ளனர். என்னுடைய மாமனார் உயிருடன் இருந்தபோது அவருடைய தந்தையார் கோவிந்தசாமி அவர்கள் 28.02.1990 அன்று அம்மூர் கிராமத்தில் உள்ள வீட்டு மனையும் விவசாய நிலத்தையும் எனது மாமனார் பட்டாபிராமன் அவர்களுக்கும்,

அவருடைய தம்பி ஆனந்தன் ஆகியோர்களுக்கு உயில் எழுதி வைத்தார். அந்த சொத்தில் எனது மாமனாருக்குண்டான பாகத்தை கடந்த 19.03.2025 அன்று வாலாஜா சார் பதிவாளர் அலுவலகத்தில் என்னுடைய மனைவியும், அவருடைய மூன்று தங்கைகளும் பாகப்பிரிவினை செய்து பதிவு செய்து கொண்டனர். பாகப்பிரிவினை செய்து பத்திர பதிவு ஏற்பாடுகளை குடும்பத்தின் மூத்த மருமகன் என்ற முறையில் நான்தான் அனைத்து வேலைகளையும் பார்த்து கொண்டேன். அதன் பிறகு நான்கு பேருக்கும் தனித்தனியாக பட்டா பெயர் மாற்றம் செய்ய கடந்த 18.08.2025 அன்று அம்மூர் இ-சேவை மையத்தில் ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். மேற்படி ஆன்லைனில் பட்டா பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பம் செய்தபோது என்னுடைய செல்போன் நம்பர் (8518884722) தான் கொடுத்தேன். மொத்தமாக ஏழு மனுவாக விண்ணப்பித்தோம். அதன் பிறகு ஒரு மாதம் கழித்து கடந்த 16.09.2025 அன்று நான் வாலாஜா தாலுக்கா ஆபீஸிற்கு நேரில் போய் அம்மூர் கிராமத்திற்குண்டான சர்வேயர் யாரென விசாரித்ததில், அவருடைய பெயர் சித்ரா என்றும், அவருடைய செல்போன் நெம்பர் நோட்டீஸ் போர்டில் உள்ளதாக சொன்னார்கள். அந்த செல்போன் நெம்பரை குறித்துக்கொண்டு வந்தேன். பின்னர், அன்றைய தினமே நான் சர்வேயர் சித்ரா அவர்களுக்கு போன் செய்து விவரம் சொன்னபோது, அவர் என்னை 17.09.2025 அன்று அம்மூர் வி.ஏ.ஓ. ஆபீஸிற்கு நேரில் வந்து அவரை பார்க்க சொன்னார். நான் 17.09.2025 அன்று வி.ஏ.ஓ. ஆபீஸிற்கு போய் சர்வேயர் சித்ரா அவர்களை பார்த்தபோது, அவர் தான் போனில் என்னிடம் பேசுவதாக சொன்னார். அன்றைய தினமே சர்வேயர் சித்ரா அவர்கள் அவருடைய செல்போனிலிருந்து (8248056098) சுமார் 3.45 மணிக்கு என்னை தொடர்பு கொண்டு ஒரு சப்-டிவிசனுக்கு ரூ.4,000/- ஆகுமென்றும், நானை 18.09.2025 அன்று காலை பீல்டிற்கு வருகிறேன் என்றும் சொன்னார். அதன்படி 18.09.2025 அன்று காலை நான் சர்வேயர் சித்ரா அவர்களை போனில் தொடர்பு கொண்டபோது, அவர் தான் தற்சமயம் மீட்டிங்கில் இருப்பதாகவும், மதியம் வருகிறேன் என்றும் சொன்னார். பின்னர், அவர் மதியம் சுமார் 3.30 மணிக்கு அவரும், அவருடன் ஒரு ஆணும் எங்களுடைய வீட்டு மனை உள்ள இடத்திற்கு வந்து அளந்து விட்டு, பின்னர் வேறு ஒருவரின் இடத்தை அளந்துவிட்டு

எங்களுடைய நிலம் உள்ள இடத்திற்கு சுமார் 5.00 மணியளவில் வந்து அளந்து கொண்டிருந்தபோது, மழை பெய்ததால் அளப்பதை நிறுத்திவிட்டு என்னிடம் மொத்தம் ஏழு சப் டிவிசனாக பிரித்து பட்டா கொடுக்க ஒரு பட்டாவிற்கு ரூ.4,000/- வீதம் 7 பட்டாவிற்கு மொத்தம் ரூ.28,000/- எனக்கு தனியாக கொடுக்க வேண்டும். பொதுவாக ஒரு பட்டாவிற்கு ரூ.5,000/- வாங்குவது உங்களுக்கு 1000 ரூபாய் குறைத்து தான் சொல்லியுள்ளேன் என்றார். நான் ரொம்ப அதிகமாக உள்ளது கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் நான் சொன்னதே ரொம்ப கம்மிதான், நான் எல்லாத்தையும் எந்த பிரச்சினையும் இல்லாமல் பிரித்து அளந்து கொடுத்துவிடுகிறேன், நான் கேட்ட அமௌண்ட்டை கொடுத்துவிடுங்கள், குறைக்க முடியாது என்று சொல்லிவிட்டார். அத்ன் பின்னர், மீதம் உள்ள நிலத்தை நாளை வந்து பார்க்கிறேன் என்று கூறிவிட்டு சென்றார். நேற்று 19.09.2025 அன்று காலை சுமார் 11.30 மணிக்கு சர்வேயரும், சர்வேயருடைய அஸிஸ்டெண்ட்டும், வி.ஏ.ஓ., வில்லேஜ் அசிஸ்டெண்ட்டும் எங்களுடைய நிலத்திற்கு வந்து சுமார் 2 மணி நேரம் அளந்தனர். பின்னர், பாகம் பிரிப்பதில் உங்களுக்கும் பிரச்சனை ஏதும் ஏற்படக்கூடாது, அதனால் நான் முதலில் ஸ்கெட்ச் போட்டு கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். 19.09.2025 அன்று இரவு சுமார் 8.30 மணிக்கு எனக்கு போன் செய்து இப்போது தான் உங்களுடைய 7 சப் டிவிசன் மனுக்களையும் பார்த்தேன். வீடு மற்றும் இரண்டு இடங்களில் நிலத்திற்கு தனித்தனி சர்வே எண்கள் உள்ளதால் சர்வே எண்களுக்கு ஏற்ப ஒவ்வொரு சர்வே எண்ணிற்கும் தலா ரூ.4,000/- எனக்கு கொடுத்தாக வேண்டும். பூங்கொடி, வாணி, கற்பகம் ஆகிய மூவர் பெயரில் உள்ள மனுக்களில் தலா மூன்று சர்வே எண்கள் வீதம் மூவரும் தலா ரூ.12,000/- என ரூ.36,000/-மும் தரணி என்பவரின் பெயரில் உள்ள மனுவிற்கு ரூ.4,000/- மும் மொத்தம் ரூ.40,000/- கொடுத்தால்தான் சப் டிவிசன் பட்டா மாற்றி தர முடியும் என்று கூறினார். ஏன் மேடம் ரூ.28,000/- தானே வேண்டும் என்று கேட்டீர்கள் தற்போது ஏன் இவ்வளவு அதிகமாக கேட்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அதற்கு அவர் வேண்டுமென்றால் ரூ.12,000/- க்கு பதிலாக ரூ.1,000/- குறைத்து கொண்டு மூவரும் தலா ரூ.11,000/-, திருமதி.தரணி என்பவரின் பெயரில் உள்ள மனுவிற்கு ரூ.4,000/- மும் மொத்தம் ரூ.37,000/-

கொடுத்தால் பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்வேன், இல்லையென்றால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். இன்று 20.09.2025 காலை சுமார் 6.45 மணிக்கு சர்வேயர் சித்ரா அவர்கள் எனக்கு போன் செய்து தான் 8.30 மணிக்கெல்லாம் வந்து விடுவதாகவும், அளப்பதற்கு ஒரு ஆளை கூட்டி வாங்க என்றும், தான் கேட்ட பணத்தையும் கையுடன் எடுத்து வாங்க என்று சொன்னார். அனைவரும் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்கலாம் என தீர்மானித்தோம். எனவே, நான் மீண்டும் அவருக்கு போன் செய்து 11.00 மணிக்கு மேல் வரும்படி சொன்னேன். அதற்கு அவர் 2.00 மணி வரைக்கும் அம்மூரில்தான் இருப்பேன், போன் செய்ங்க என்று சொன்னார். எனக்கும், என்னுடைய மனைவி மற்றும் அவருடைய தங்கைகளுக்கும் லஞ்சமாக பணம் ரூ.37,000/- ஐ கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.37,000/-ம் கேட்கும் வாலாஜா சர்வேயர் திருமதி.சித்ரா அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சப் டிவிசன் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக ஆன்லைனில் அப்ளை செய்த 7 ஒப்புகைச்சீட்டுகள் மற்றும் வாலாஜா சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான பாகப்பிரிவினை பத்திரம் எண்.1710/2025-ன் நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, (SD/-XXXXXX) A.K.Karthikeyan 20/9/25.

Sir, Received the complaint on 20.9.2025 at 07.45 Hrs., after due verification, Inspector Tmt.S.Vijayalakshmi is to register a case. Sd/- xxxxxxxxxxx (V.Ganesan) 20/9/2025, DSP/VAC/Ranipet.

Sir, Received the complaint on 20.09.2025 at 07.45 Hrs. after verifying the antecedents of the accused & credibility of the complainant, I have registered a case in Ranipet V&AC Cr.No.3/2025 U/s 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 20.09.2025 at 09.00 hrs. Sd/- xxxxx (S.Vijayalakshmi) 20/9/2025 Inspector of Police, Vigilance & Anti-Corruption, Ranipet.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble PDJ and Special Judge, Ranipet and other copies to the officers concerned.

S.Vijayalakshmi
20/9/25
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Ranipet.